செ.வெ.எண்: 235/2019 நாள்: 31.05.2019

**கால்நடை பராமரிப்புத் துறை மூலமாக சு.நல்லூர் கிராமத்தில் நடைபெற்ற கறவை பசுக்களுக்கான இனப்பெருக்க மருத்துவ பரிசோதனை மற்றும் வெள்ளாடுகள் / செம்மறயாடுகளுக்கான குடற்புழு நீக்க முகாம் மாவட்ட ஆட்சித் தலைவர் துவக்கி வைத்தார்...**

திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை வட்டம், சு.நல்லூர் கிராமத்தில் இன்று (31.05.2019) கால்நடை பராமரிப்புத் துறை சார்பாக நலைபெற்ற கறவை பசுக்களுக்கான இனப்பெருக்க மருத்துவ பரிசோதனை மற்றும் வெள்ளாடுகள் / செம்மறியாடுகளுக்கான குடற்புழு நீக்க முகாமினை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. க. சு. கந்தசாமி, இ.ஆ.ப. அவர்கள் துவக்கி வைத்து, பயனாளிகளுக்கு தாது உப்பு கலவை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் மரு.முகமது காலீத்து, துணை இயக்குநர் மரு.எம்.ராநேந்தரின், உதவி இயக்குநர் மரு.தா.மனோகரன், கால்நடை உதவி மருத்துவர்கள் மரு.ராஜேஸ்வரி, மரு.ராஜ்குமார், மரு.அருளாநந்தம், மரு.தாரணி, அரசு அலுவலர்கள், பயனாளிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். மேலும், இம்முகாம் மூலம் சு.நல்லூர் கிராமத்தை சேர்ந்த 153 விவசாயிகளின் 201 கறவை பசுக்கள் / கன்றுகள், 323 வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் பயன் அடைந்தனர்.

திருவண்ணாமலை மாவட்டத்தில், கால்நடை பராமரிப்புத் துறை மூலமாக 30.05.2019 மற்றும் 31.05.2019 ஆகிய இரண்டு நாட்கள் கறவை பசுக்களுக்கு இனப்பெருக்க மருத்துவ பரிசோதனையும், வெள்ளாடுகள் / செம்மறியாடுகளுக்கு குடற்புழு நீக்க முகாமும் நடைபெற்றது. இம்முகாமில் தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ள விலையில்லா கறவை பசுக்கள், வெள்ளாடுகள் / செம்மறியாடு பயனாளிகள் மற்றும் அனைத்து கால்நடை விவசாயிகளும் கலந்து கொண்டு பயனடைந்தார்கள். மறைந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு 15.9.2011 அன்று தமிழகத்தில் வறுகை கோட்டிற்கு கீழ் உள்ள ஏழை, எளிய பெண்களின் பொருளாதார நிலையினை உயர்த்துவதற்கும், வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கும், வெண்மை புரட்சியை உருவாக்குவதற்கும் விலையில்லா கறவை பசுக்கள் மற்றும் விலையில்லா வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டு கடந்த 8 ஆண்டுகளாக சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் திருவண்ணாமலை மாவட்டத்தில் 52,531 பயனாளிகளுக்கு மொத்தம் 2,10,124 வெள்ளாடுகள் / செம்மறியாடுகளும், 5400 பயனாளிகளுக்கு 5400 கறவை பசுக்களும் 2011-2012 ஆண்டு முதல் 2018-2019 ஆண்டு முடிய வழங்கப்பட்டுள்ளது. தமிழக அரசின் கால்நடை பராமரிப்புத் துறை மூலமாக வழங்கப்படும் விலையில்லா கறவை பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் வழங்கும் திட்டங்கள் மூலம் வழங்கப்பட்ட கறவை பசுக்களின் பால் உற்பத்தித்திறனை பெருக்கவும், வெள்ளாடுகள் / செம்மறியாடுகளின் எடையினை அதிகரிக்கவும் தமிழ்நாடு முழுவதும் 30.05.2019 மற்றும் 31.05.2019 ஆகிய இரண்டு நாட்கள் கறவை பசுக்களுக்கு இனப்பெருக்க மருத்துவ பரிசோதனை மற்றும் வெள்ளாடுகள் / செம்மறியாடுகளுக்கு குடற்புழு நீக்க முகாம் நடைபெற்றது.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவண்ணாமலை மாவட்டம்.**